கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

திருவாரூர்.

**CC.No. 90/2024**

2024-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14 -ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா.1 ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுகுமார் | வயது | 54 |
| தந்தை பெயர் | பக்கிரிசாமி | ஜாதி | |
| தொழில் | பல்பொருள் அங்காடி | மதம் | |
| ஊர் | மாங்குடி | தாலுக்கா | |

( எதிரிகள் 1, 3 முதல் 6 வரையான எதிரிகள் ஆஜரில் உள்ளார். 2 வது எதிரி ஆஜரில்லை. குவிமுச 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் முன்னிலை.)

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது மாங்குடி வசித்து பல்பொருள் அங்காடி வைத்துள்ளேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. கடந்த 14.01.2021 ம் தேதி மதியம் 02.30 மணியளவில் என்னுடைய கடை வாசலில் நிறுத்திவைக்கப்பட்டியிருந்த வேனின் ஒரு பக்க கண்ணாடி உடைந்து இருந்தது. இது சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் அளித்தியிருந்தேன். இது செய்தது யார் என்று எனக்கு தெரியாது. எதிரிகள் சம்பவ இடத்தில் நின்றியிருந்ததால் அவர்கள் தான் தாக்கியிருப்பார்கள் என்ற சந்தேகத்தின் அடிப்படையில புகார் மனு கொடுத்து விட்டேன். நீதிமன்றத்தில் புகார மனு நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **(புகார் மனு அசா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது). போலீசார் என்னை விசாரித்தார்கள்.**

**சாட்சி அரசு தரப்பு வழக்கை அனுசரிக்கவில்லை என்பதால் அரசு தரப்பு வேண்டுகோளிற்கிணங்க குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளித்து அ.த.கு.வி.**

**கடந்த** 14.01.2021 ம் தேதி மதியம் 02.30 மணியளவில் எதிரிகள் என் கடை முன்னிலையில் சத்தம் போட்டு அங்கு நிறுத்தப்பட்டியிருந்த எனக்கு சொந்தமான வேனின் முன்பக்க கண்ணாடியை உடைத்து கம்பு, கட்டையை காட்டி கொலை மிரட்டல் விடுத்தாரகள் என்றும், இது சம்பந்தமாக எதிரிகளை குறிப்பிட்டு காவல் நிலையத்தில் புகார் அளித்தியிருந்தேன் என்றும், வாக்குமூலத்திலும் கூறிவிட்டு தற்போது எனக்கே

தெரிந்த காரணத்திற்கு உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

**இல்லை.**

கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

திருவாரூர்.

**CC.No. 90/2024**

2024-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14 -ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 2 ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கணேஷ்குமார் | வயது | 47 |
| தந்தை பெயர் | சின்ன அழகர் சாமி | ஜாதி | |
| தொழில் | பாத்திரக்கடை வியாபாரம் | மதம் | |
| ஊர் | மாங்குடி | தாலுக்கா | |

( எதிரிகள் 1, 3 முதல் 6 வரையான எதிரிகள் ஆஜரில் உள்ளார். 2 வது எதிரி ஆஜரில்லை. குவிமுச 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் முன்னிலை.)

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது மாங்குடி வசித்து பாத்திரக்கடை வைத்துள்ளேன். அசா.1 எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. வழக்கு சம்பந்தமாக எந்த விபரமும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பு வழக்கை அனுசரிக்கவில்லை என்பதால் அரசு தரப்பு வேண்டுகோளிற்கிணங்க குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளித்து அ.த.கு.வி.**

**கடந்த** 14.01.2021 ம் தேதி மதியம் 02.30 மணியளவில் எதிரிகள் அசா.1ன் கடை முன்னிலையில் சத்தம் போட்டு அங்கு நிறுத்தப்பட்டியிருந்த அசா.1 க்கு சொந்தமான வேனின் முன்பக்க கண்ணாடியை உடைத்து கம்பு, கட்டையை காட்டி கொலை மிரட்டல் விடுத்தாரகள் என்றும், அதனை நான் நேரிட்டு பார்த்தேன் என்றும், இது சம்பந்தமாக எதிரிகளை குறிப்பிட்டு அசா.1 காவல் நிலையத்தில் புகார் அளித்தார் என்றும், வாக்குமூலத்திலும் கூறிவிட்டு தற்போது எனக்கே தெரிந்த காரணத்திற்கு உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

**இல்லை.**

Typed under My dictation in Open Court read over to Witness and admitted by the witness to be correct.

Sd/-
S. Cintha, B.A.,B.L(Hons).,
Judicial Magistrate,
Additional Mahila Court,
Tiruvarur.